பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 16 (31—8—68) சனி ★ வெளியூர்: ஆவணி 17 (1—9—68) ஞாயிறு [இதழ்: 66

சட்டம் வரும்!

சென்னை, ஆக. 31—

" 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்கவேண்டும்' என்ற ஏற்பாட்டையே தமிழக அரசு ஆதரிக்கிறது; இதை நிறைவேற்றுவதற்கு, மசோதா ஒன்றைக் கொண்டுவரத் தமிழக அரசு உத்தேசித்திருக்கிறது"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன், டி.யு.சி.எஸ். ஊழியர் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

மூன்று பத்திரிகைகள்மீது உரிமைப் பிரச்சினை

இல்லாததை இட்டுக்கட்டி தவறான விமர்சனம்

திருத்தமும் வருத்தமும் தெரிவிக்க அவகாசம் அளிக்கப்பட்டது

சென்னை, ஆக. 31—

இன்று சட்டமன்றத்தில் ஒரே காரியத்திற்காக மூன்று பத்திரிகைகள்மீது மூன்று உறுப்பினர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினைமீது கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கு மேல் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

இறுதியில், அந்தப் பத்திரிகைகள் முதலமைச்சர் தந்த விளக்கத்தையும், அவை செய்த தவறுக்கு வருத்தத்தையும் தெரிவித்தால் இப்பிரச்சினையை இதோடு விட்டுவிடலாம் என்று அண்ணா அவர்கள் தெரிவித்த யோசனையை யொட்டி, அந்தப் பத்திரிகைகட்கு அவைத் தலைவர் அவகாசம் அளிக்கும்வகையில், தமது தீர்ப்பை ஒத்திவைத்தார்.

எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்துக்கு அண்ணா அவர்கள் பதிலளித்துப் பேசுகையில், அண்ணா சொல்லாத ஒன்றைச் சொல்லியதாக அந்தப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு, அதன் அடிப்படையில், விமர்சனமும் எழுதியிருப்பது சட்டமன்றத்தை அவமதிப்பதாகும்" என்பதே மூன்று உறுப்பினர்களும் எழுப்பிய உரிமைப் பிரச்சினையின் சாரம்.

'சுதேசமித்திரன்'

முதலில் கழக உறுப்பினர் திரு. இரெ. இளம்வழுதி அவர்கள், 'சுதேசமித்திரன்'மீது உரிமைப் பிரச்சினை எழுப்பினர்.

'சுதேசமித்திரன்' (சென்னை: ஆக. 30) இதழில், 'கண்ணியம் காக்கவும்' என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தில், முதலமைச்சர் அவர்கள் பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டு, முதலமைச்சர் சொல்லாத ஒன்றைச் சொல்லியதாக எழுதி அதன்மீது விமர்சனம் செய்திருப்பதுடன், புத்திமதியும் கூறியிருப்பதாக எடுத்துக்காட்டி, 'இதனை உரிமைக் குழுவுக்குவிட வேண்டும்' என்று வற்புறுத்தினர்.

'நவமணி'

அடுத்து, கழக உறுப்பினர் ஆர். என். அரங்கநாதன், அதேபோல், அண்ணா சொல்லாத ஒன்றைச் சொன்னதாகச் செய்தி வெளியிட்டிருக்கும் 'நவமணி' இதழ் மீதும், தவறான தகவல் அடிப்படையில் கருத்தறிவித்திருக்கும் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், திருமதி அனந்தநாயகி ஆகியோர் மீதும் உரிமைப் பிரச்சினை எழுப்பினர்.

'ஜெயபேரிகை'

அடுத்து, இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் உறுப்பினர் திரு ஞானசம்பந்தம், 'ஜெயபேரிகை' எனும் இதழ்மீது ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பினர்.

'ஜெயபேரிகை' இதழ் இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமன்றி, எப்போதுமே இப்படித்தான் அவையை இழிவுபடுத்தும் வகையில் எழுதி வருவதாகவும், முதலமைச்சர் எப்போதுமே பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பேசிவருகிறார் என்று அது எழுதியிருப்பதாகவும் சுட்டிக்காட்டினர்.

இதற்கிடையே சுதந்தரா கட்சி உறுப்பினர் எச். வி. ஹண்டே எழுந்து, 'இந்தப் பிரச்சினைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா?' என்று கேட்டார்.

அதற்கு அண்ணா அவர்கள் பதிலளிக்கையில், 'சுதேசமித்திரன்' மிகப் பழைய பிரபலமான பத்திரிகை என்றும், தவறான ஒரு செய்தி அதில் வருமானால், அதனை மக்கள் உண்மை என்றே நம்பக்கூடும் என்றும், அந்தத் தவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்துவது அவசியம் என்றும் கூறினர்கள்.

பிறகு அண்ணா அவர்கள், தாம் அன்று பேசிய பேச்சை— சட்டமன்றப் பதிவேட்டில் பதிவாகியிருப்பதை — அப்படியே படித்துக் காட்டினர்கள்.

'பெண்கள், மலிவுச் சரக்குகள்' என்று தாம் ஓர் இடத்திலும் குறிப்பிடவேயில்லை என்பதை உறுதிப்படுத்தியதுடன், தாம் எப்போதுமே தாய்க் குலத்தை இழிவுபடுத்தும் வகையில் பேசியதில்லை என்பதையும், தாம் கூறியதெல்லாம் பெண் குலத்தின் மதிப்பைக் காப்பாற்றும் வகையிலேயே உள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினர்கள்.

"நான் காரசாரமாகப் பேசுவதுண்டு; ஆனாலும் கண்ணியக் குறைவாகப் பேசமாட்டேன்; 'பெண்கள் மலிவுச் சரக்கு' என்றும், பெண்களை இழிவுபடுத்தும் சொற்களும் என் வாயில் வரவே வராது" என்றும் கூறினர்கள்.

"நான் அன்றையத் தினம் அப்படிக் கண்ணியக் குறைவாகப் பேசியிருந்தால், பேசும்போதே காங்கிரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் எழுந்து அதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கலாம்" என்றும் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இந்த மூன்று உரிமைப்பிரச்சினைகளும் ஒன்றே. ஆகையால, அந்த மூன்று பத்திரிகைகளும், நான் அளித்த விளக்கத்தை வெளியிட்டு, தாங்கள் செய்த தவறுக்கு வருத்தம் தெரிவித்தால் அத்தோடு இப்பிரச்சினையை விட்டுவிடலாம் என்றும், அதற்கான வாய்ப்பு அளிக்குமாறும் அவைத்தலைவரைக் கேட்டுக்கொண்டார்.

"எதிர்க் கட்சித் தலைவர் இது பற்றி என்ன கருதுகிறார்?" என்றும் அண்ணா அவர்கள் கேட்டார்.

"அந்தப் பத்திரிகைகள் எழுதியது முறைதானா? அதை ஆதரிக்கிறாரா? அல்லது நான் கூறிய கருத்தை ஏற்றுக் கொள்கிறாரா?" என்றும் அண்ணா கேட்டார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன், எழுந்து இந்த விஷயத்தில், முதலமைச்சர் கருத்துடன் தாம் ஒத்துப்போவதாகக் கூறினர்.

திரு. ஞானசம்பந்தம் 'என்னுடைய உரிமைப் பிரச்சினையைத் தனியாகக் கவனிக்க வேண்டும்' என்றார்; 'முதலமைச்சர் அன்று பேசிய பேச்சை மட்டும் குறிப்பிட்டு மற்ற இரண்டு பத்திரிகைகளும் எழுதியுள்ளதாகவும், ஆனால், 'ஜெயபேரிகை' எப்போதுமே, 'முதலமைச்சர் இழிவாகப் பேசுவதாகக்' குறிப்பிட்டு எழுதியுள்ளது என்றும் கூறினர்.

அண்ணா அவர்கள், இதற்குப் பதிலளிக்கையில், 'அந்த ஏட்டுக்கும்—மற்ற ஏடுகளுக்குக் கொடுப்பதுபோல் — வருத்தம் தெரிவிக்க ஒருவாய்ப்பு அளிக்கலாம்' என்றார்.

இதற்கிடையே, எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள், 'முதலமைச்சர் பேச்சில், பிரச்சினைக்குரிய அந்தப் பகுதியையே சட்டமன்றப் பதிவேட்டிலிருந்து நீக்கிவிடலாம்' என்றார்.

அதற்கு அண்ணா அவர்கள் பதிலளிக்கையில், தாம் பேசும்போதே, 'தென்காசியில் அப்படிக் காங்கிரசுப் பெண் பேச்சாளர் பேசவில்லை' என்று உறுதியாகக் கூறி, யாரேனும் ஓர் காங்கிரசு உறுப்பினர் மறுப்புத் தெரிவித்திருந்தால், தாம் அப்போதே தவற்றைத் திருத்திக்கொண்டிருக்க முடியும் என்றும், யாராவது அப்படி மறுப்புத் தெரிவிப்பார்களா என்று அன்றைக்கே தாம் எதிர்பார்த்திருந்ததாகவும், இப்போதுகூட யாரேனும் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்தால் அதற்காகத் தாம் வருத்தம் தெரிவிக்கத்தயார் என்றும் கூறினர்கள்.

அவைத் தலைவர், 'பதிவேட்டிலிருந்து அந்தப் பகுதியை நீக்கத் தேவையில்லை' என்றார்; 'மறுப்புத் தெரிவிக்கப்படுமானால், அந்தக் குறிப்பையும் அதில் சேர்த்துக்கொள்ளலாம்' என்றார்.

இடையில் காங்கிரசு உறுப்பினர் இராமமூர்த்தி ஓர் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினர்; 'மன்ற உறுப்பினர் பேசிய பேச்சுக்களைத் திருத்தி, நூல் நிலையத்தில் பார்வைக்கு வைக்க ஒரு வாரம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், ஏனவே, ஒரு வார அவகாசத்துக்குப் பின்னர்தான் அந்தப் பேச்சின் அடிப்படையில் உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டும் என்றும் அவர் கூறினர்.

"ஒரு வார காலம் கழித்துத்தான் அந்தப் பேச்சை உறுதிப்படுத்த முடியும் என்றால், திருத்தப்படாத பேச்சின் அடிப்படையில் அடுத்த நாளே பத்திரிகையில் விமர்சனம் எழுதுவது எப்படி முறையாகும்?" என்று அவைத் தலைவர் கேட்டார்.

தம் பேச்சைத் தாம் திருத்துவதற்கு முன்பே -- சட்டமன்றத்தில் பதிவானபடியே அதன் பிரதியைத் தாம் கையில் வைத்திருப்பதாகவும், அதிலேயே, தம்மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்பதையும் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டினர்கள்.

காங்கிரசு உறுப்பினர் திரு. கே. விநாயகம் எழுந்து, தாம் நேற்று சி. சுப்பிரமணியம் அவர்களுடன் சேர்ந்து ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியதாகவும், தென்காசித் தொகுதியில் காங்கிரசுப் பெண் பேச்சாளர் தொடையைத் தட்டிப் பேசியதாகக் கூறப்படுவது சரியில்லை என்று திரு. சுப்பிரமணியம் தன்னிடம் கூறியதாகவும் கூறினர்.

அதற்கு அண்ணா அவர்கள் பதிலளிக்கையில், திரு. சுப்பிரமணியம் தென்காசித் தொகுதியில் கடைசிவரை இருக்கவில்லை என்றும், நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் அத்தனையிலும் அவர் கலந்துகொண்டிருக்க முடியாது என்றும், அவர் கலந்துகொள்ளாத கூட்டத்தில் அப்படி அந்தப் பெண் பேச்சாளர் பேசியிருக்கக்கூடும் என்றும் எல்லாவற்றிற்கும் சில தினங்களில் தாம் திரு. சுப்பிரமணியத்தைச் சந்திக்க இருப்பதாகவும், அப்போது அவரிடம் இதுபற்றிக் கேட்டு விவரம் தெரிந்து கொண்டபின், தாம் கூறியதைத் திருத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் திருத்தமும் வருத்தமும் தெரிவிக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினர்கள்.

இறுதியாக அவைத் தலைவர், 'முதலமைச்சரும், எதிர்க் கட்சித் தலைவரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்சொன்ன மூன்று பத்திரிகைகட்கும், திருத்தம் தெரிவிக்கவும், வருத்தம் தெரிவிக்கவும் அவகாசம் அளிக்கும் வகையில் தமது தீர்ப்பை ஒத்திவைப்பதாகக் கூறினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

பேரறிஞர் அண்ணா அவர்களின்
60-ம் ஆண்டு பிறந்த நாளையொட்டி
'நம் நாடு'
சிறப்பு மலர்

14--9--68 அன்று வெளிவரும்

★ குறைந்த விலையில்---
★ சிறந்த முறையில்---
தயாராகிறது!

★

விலை 50 காசு

'நம் நாடு' — இராயபுரம் — சென்னை - 13

மக்களைத் தேடி அதிகாரிகள் வருவர்!

குறைகளைத் தீர்க்கத் தமிழக அரசு ஏற்பாடு

'மூன்று அம்சத் திட்டத்' துவக்க விழாவில் அண்ணா விளக்கம்

மதுராந்தகம், ஆக. 30—

"முன்பெல்லாம் குறைகளைக் குறிப்பிட்டு மனுக் கொடுப்பதற்கே மக்கள் பயப்படுவார்கள்; அப்படியே மனுக் கொடுத்தாலும், அந்த மனு என்ன ஆயிற்று என்றே தெரியாமல் போய்விடும்; இந்த அவல நிலையைப் போக்குவதே என்னுடைய திட்டத்தின் நோக்கமாகும்.

"முன்பு, 'காங்கிரசார் அழைத்து வந்தால்தான் அதிகாரிகளைப் பார்க்க முடியும்' என்ற நிலையும் இருந்தது; இப்போது அப்படித் 'தரகர்' இல்லாமல் அதிகாரிகளைப் பார்க்க முடியும்; இதுதான் சனநாயக நாட்டுக்குத் தேவை; எனவே, அதிகாரிகளுக்கும்—மக்களுக்கும் இடையே உள்ள பள்ளம் அகற்றப்பட வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவாகள், கிராம மக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்கான 'மூன்று அம்சத் திட்ட'த்தைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

தண்டலம் கிராமத்தில் இத்திட்ட விழா, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிட்டிபாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் என். கிருஷ்ணன், கே.எம். இராசகோபால், மேலவை உறுப்பினர் சி. வி. இராசகோபால் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு பேசினர்.

மாவட்டக் கலெக்டர் இலட்சுமி காந்தன் பாரதி வரவேற்றுப் பேசினார்.

ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர் வி. சி. சம்பந்தம் நன்றி கூறினார்.

முதலமைச்சர் அண்ணா

திட்டத்தைத் தொடங்கிவைத்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மூன்று அம்சத் திட்டம் என்பது மூன்று வகையான திட்டங்களை இணைப்பது ஆகும். இதன்படி அதிகாரிகள் மாதம் ஒருமுறை நேரில்வந்து மக்களின் குறைகளைக் கேட்பார்கள்; 'அந்தக் குறைகளைத் தீர்க்க முடியும்; அல்லது தாமதம் ஆகும்' என்பதை 20 நாட்களுக்குள் உடனுக்குடன் தெரிவிப்பார்கள்.

தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக இங்குதான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது; இதற்கு நல்ல ஆதரவு இருந்தால், மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் எண்ணம் எனக்கு இருக்கிறது.

நகரத்துக்குப் படையெடுக்கவேண்டாம்

கிராமத்தில் உள்ள இளைஞர்கள், நாகரீக மோகத்தினால் நகரங்களுக்குச் செல்கிறார்கள்; இது தவறு. சென்னை நகரில் மொத்தம் 22 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள்; ஆனால், 10—12 இலட்சம் மக்களுக்குத்தான் சுகாதார வசதி செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே, பலர் சுகாதார வசதி இல்லாமல் அல்லல்படுகிறார்கள்.

எனவே, கிராம மக்கள் கிராமத்திற்கே திரும்பவேண்டும். திரும்பி--விவசாயத்தில் ஈடுபட்டு—விளைச்சலைப் பெருக்க வேண்டும்.

'உணவு நிலைமை இப்போது பரவாயில்லை' என்ற நிலைக்கு முன்னேறியிருக்கிறது. 5 ஏக்கருக்கு ஒரு கிணறு வீதம் தோண்டி இருந்தால், விவசாய நெருக்கடியே ஏற்பட்டு இருக்காது.

காங்கிரசாரை விடக் கல்வியில் அக்கறை

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் பள்ளிக்கூடங்களை மூடிவிடுவோம் என்று எங்கள்மீது காங்கிரசார் குற்றஞ்சாட்டினார்கள். நான் கல்வியின் பெருமையை உணர்ந்தவன்; எங்கள் ஆட்சியில், வருமானத்தின் கால் பகுதியை கல்விக்குச் செலவிடுகிறோம். இது காங்கிரசு அரசு கல்விக்குச் செலவிட்டதைவிட, ரூ. 10 கோடி அதிகமாகும்."

கே. ஏ. மதியழகன்

விழாவுக்குத் தலைமைதாங்கிய மதியழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த மூன்று அம்சத் திட்டத்தினால், இந்த நாட்டின் கடைசி குடிமகனுடைய குறையைத் தீர்ப்பதற்கும் வழி ஏற்படுகிறது.

"அதிகாரிகளை மக்கள் நாடிச் செல்லும் நிலை மாறி, மக்களைத் தேடி அதிகாரிகள் வரும் நிலை வந்துள்ளது! இது ஒரு புதிய திருப்பமாகும்!"

பஸ் ஊழியர்கட்குக் கைத்தறி உடை

ஆண்டுக்கு ரூ. 2,16,000 மிச்சம்

சென்னை, ஆக. 30—

"தமிழக அரசுப் போக்குவரத்து ஊழியர்கட்குக் கதர்க் காக்கி உடைகட்குப் பதிலாக ஆலைகளில் தயாரான காக்கித் துணியை வழங்க அரசு-முடிவு செய்துள்ளதா?"

என்று இன்று சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் கே. விநயகம் கேட்ட கேள்விக்கு, 'இல்லை' என்று விடையளித்தார்--அமைச்சர் கருணாநிதி.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"கதருடை, விரைவில் கசங்கி விடுகிறது என்றும், கதருக்குப் பதில் காக்கி உடை தரவேண்டும் என்றும் ஊழியர்கள் கோரினர்; 'அது முடியாது' என்று கூறி, 'கதருக்குப் பதில் கைத்தறியாவது பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று அரசு தெரிவித்தது. கைத்தறித் துணி வழங்குவதால் அரசுக்கு ரூ. 2,16,000 வரை ஆண்டுக்கு மிச்சப்படுகிறது.

"அவர்கட்கு ஆண்டுக்கு ஒரு முறை தீபாவளியின்போது உடைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு அவர்களின் அவசரத் தேவையை முன்னிட்டு செப்டம்பர் மாதமே வழங்கப் படவிருக்கிறது."

இருக்கிற உரிமையையும் பறிக்கிறது டில்லி அரசு!

அரிசி ஆலைகளுக்கு லைசென்சு வழங்குவது பற்றிப் புதிய சட்டம்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் மனவேதனை

சென்னை, ஆக. 30—

"அரிசி அரைவை ஆலைகளை அரசுடைமையாக்குவது என்பது உணவுத் தானிய மொத்த வியாபாரத்தை அரசே ஏற்கும் நிலை வரும்போதுதான் இயலும்; இப்போது அரசுடைமையாக்கும் உத்தேசம் இல்லை"

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இன்று சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அவர், மேலும் பல துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"அரிசி ஆலைகளை அரசுடைமையாக்கும் உத்தேசம் இப்போது இல்லை என்றாலும், கூட்டுறவுத் துறையில் ரூ. 1 கோடி 10 இலட்சம் செலவில் 11 நவீன ஆலைகளை ஏற்படுத்தவிருக்கிறோம்.

"தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 5 இடங்களில் நவீன ஆலைகளை ஏற்படுத்தவிருக்கிறோம்.

"வட ஆற்காடு மாவட்டத்திலும் ஓர் ஆலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

"நவீன அரிசி ஆலைகளை அரசு குத்தகைக்கு எடுத்து நடத்தும் யோசனையும் இருந்துவருகிறது.

"அரிசி ஆலைகட்கு இருக்கும் லைசென்சு முறையையே ரத்து செய்யும்உத்தேசமில்லை. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பின் ஏராளமான இடங்களில் --- கிட்டத்தட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில் --- அரிசி ஆலைகளை ஏற்படுத்த மிகத் தாராளமாக லைசென்சுகளை வழங்கியிருக்கிறது.

"அரிசி ஆலைக்கு லைசென்சு வழங்கும் இந்த அதிகாரத்தையும் மாநில அரசிடமிருந்து பறித்துக்கொள்ளும் வகையில் மத்திய அரசு சட்டமொன்று இயற்றி, அது குடியரசுத் தலைவரின் கையெழுத்துக்காகக் காத்திருக்கிறது."

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்க்கு உதவி

"வேதாரண்யம் ஆறுகாட்டுத் துறையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 117 மீனவர்கட்கு ஏற்பட்ட விரயத்தை ஈடுசெய்யும் பொருட்டு பருத்தி, நைலான் வலை நூல்கள் வாங்குவதற்குப் பாதி மானியமும், பாதி கடனாகவும் வழங்கப்பட்டது"

என்று சட்டமன்றத்தில், ந. தர்மலிங்கம் கேள்விக்கு வேளாண்மைத்துறை அமைச்சர் பதிலளித்தார்.

அமைச்சர் கருணாநிதி--- மரபை மீறவில்லை

காங்கிரசு உறுப்பினரின் உரிமைப் பிரச்சினையில் தீர்ப்பு

சென்னை, ஆக. 30—

ஹேமாவதி அணைபற்றி டில்லியில் தாம் நடத்திய பேச்சுப் பற்றி அமைச்சர் கருணாநிதி சட்டமன்றத்திற்குத் தெரிவிப்பதற்கு முன்பே டில்லிச் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாகவும், இது அவையின் மரபை மீறிய செயலாகும் என்றும் காங்கிரசு உறுப்பினர் என். எஸ். வி. சித்தன் கொண்டுவந்த உரிமைப்பிரச்சினை, சட்டமன்றத் துணைத் தலைவரால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதற்கு அமைச்சர் கருணாநிதி அளித்த விளக்கத்திற்குப் பிறகு, துணை அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் தமது தீர்ப்பில், 'இதில் மரபு மீறல் எதுவும் இல்லை' என்று கூறினார்.

உரிமைப் பிரச்சினை எழுப்பியவர் மீதே உரிமைப் பிரச்சினை

உரிமைக் குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது

பொதுப் பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், 'அவைக்குத் தவறான தகவல் தந்ததாக'க் குற்றஞ்சாட்டி ச. சோ கட்சி உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் இன்று சட்டமன்றத்தில் கொண்டுவந்த உரிமைப் பிரச்சினையைத் துணை அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் தள்ளுபடி செய்தார்.

"சட்டமன்ற நிகழ்ச்சிகள் பதிவேட்டில், திரு. பாலசுப்பிரமணியம் சாட்டும் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை; எனவே, அமைச்சர் கருணாநிதி உரிமை மீறல் எதுவும் செய்யவில்லை"

என்று துணை அவைத் தலைவர், தமது தீர்ப்பில் கூறினார்.

அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் உடன் எழுந்து, தாம் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகக் கூறி, அவைக்குத் தவறான தகவல் தந்ததாகத் திரு பாலசுப்பிரமணியம்மீது ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்; இதனை உரிமைக் குழு ஆய்வுக்கு துணை அவைத் தலைவர் அனுப்பி வைத்தார்.

ஆட்டோ - ரிக்ஷாக்கள் ஒழிக்கப்படமாட்டா

அதிகப்படுத்துவதற்கும் அனுமதி இல்லை

"சென்னையில் ஆட்டோ-ரிக்ஷாக்களை ஒழிக்கும் எண்ணம் இல்லை; போக்குவரத்து நெரிசல் அதிகரித்திருப்பதால் இப்பொழுதுள்ள எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டாம் என்று காவல் துறையினர் தெரிவித்திருக்கின்றனர்; கோவை போன்ற நகரங்களில் அதிக ஆட்டோ-ரிக்ஷாக்களை அனுமதிக்கலாம்"

என்று பொதுப் பணி அமைச்சர் திரு. கருணாநிதி, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

நாகசுந்தரம்:—"கல்கத்தா போன்ற நகரங்களில் மூன்று சக்கரம் டெம்போ வண்டிகளில் 7-பேர்வரை ஏற்றிச் செல்கிறார்கள். அதேபோல் இங்கும் டெம்போ வண்டிகள் விடப்படுமா?"

அமைச்சர்:—"இதுபற்றி ஆராய வேண்டும்."

வி. டி. அண்ணாமலை:—"ஏழை, நடுத்தர மக்களின் வசதியை முன்னிட்டு சென்னையில் ஆட்டோ-ரிக்ஷாக்கள் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படுமா?"

அமைச்சர்:—"ஏழை - நடுத்தர மக்களின் வசதியை முன்னிட்டுத்தான் அரசுப் பேருந்துகள் அதிகரிக்கப்பட்டுள்ளன."

எம்.எஸ். மணி:—'சிறிய சந்துகளில் பேருந்துகளோ டாக்சிகளோ செல்ல முடியாத நிலை இருப்பதால், சைக்கிள் ரிக்ஷாவில் இரண்டு பேர் அமர்ந்து செல்ல அனுமதிக்கப்படுமா?'

அமைச்சர்:—காவல் துறையினரைக் கலந்து ஆலோசிக்கப்படும்."

சுரேந்திரன்:—"சந்து பொந்துகளுக்குச் செல்ல ஆட்டோ-ரிக்ஷாதான் தேவைப்படுகிறது; ஆகவே அதன் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா?"

அமைச்சர்:—"இங்கு போக்குவரத்து அதிகம் இருப்பதால், ஆட்டோ-ரிக்ஷாக்களை அதிகப்படுத்த அனுமதிக்க முடியாது."

தமிழகத்தில் தேவைக்கு அதிகமான வனஸ்பதி ஆலைகள்

அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஆக. 30—

சித்தன்:—"தமிழ்நாட்டில் அரசுத் துறையில் ஒரு வனஸ்பதித் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?"

அமைச்சர் நெடுஞ்செழியன்:—"இதுபோன்ற செயற்குறிப்பு ஏதும் இல்லை."

சித்தன்:—"தமிழ்நாட்டில் வேர்க்கடலை நிறைய விளைவதால் அதைப் பயன்படுத்தி வனஸ்பதித் தொழிற்சாலை ஏற்படுத்துவது சம்பந்தமாக இந்த அரசு முயற்சி எடுக்குமா?"

அமைச்சர்:—"ஏற்கனவே பல வனஸ்பதித் தொழிற்சாலைகள் நாட்டில் செயல்பட்டு வருகின்றன. அவை, தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்து வருகின்றன. மேலும் இந்தத் தொழிற்சாலைகளேகூட மேலும் உற்பத்தியை அதிகரிக்க முடியும்; எனவே, புதிய தொழிற்சாலை தேவையில்லையென மத்திய அரசு கருதுகிறது."

கேள்வி:—"மூடப்பட்ட தொழிற்சாலைகள் எந்தக் காரணத்திற்காக மூடப்பட்டிருக்கின்றன? அவைகளை ஏற்க அரசு முன்வருமா?"

அமைச்சர்:—"இது முடப்பட்டதற்கான விவரங்கள் தெரியவில்லை. இவற்றை அரசு ஏற்க இயலாது; அவர்களே ஏற்று நடத்த முன்வந்தால் அரசு ஆவன செய்யும்."

கேள்வி;—"வனஸ்பதித் தொழிற்சாலை ஏற்படுத்துவதில் மத்திய அரசின் பங்கு என்ன?"

அமைச்சர்:- 'உரிமம் (லைசென்சு) வழங்கும் பொறுப்பு மத்திய அரசினுடையது"

கேள்வி:—"விழுப்புரம், காட்பாடி ஆகிய இடங்களில் ஆரம்பிப்பதாக இருந்த வனஸ்பதித் தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைக்கவும், புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும் அரசு முன்வருமா?"

அமைச்சர்:—"விழுப்புரம், காட்பாடி தொழிற்சாலைகள் இயங்காமல் போன காரணத்தை ஆராய்ந்த பிறகுதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். தமிழ்நாட்டிலேயே ஏற்கனவே 4 வனஸ்பதி தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன; இவை நான்கும் போதுமான அளவுக்கு உற்பத்தி செய்து வருகின்றன."

கேள்வி:—"மூடப்பட்ட வனஸ்பதி ஆலைகளை அக்ரோ இண்டஸ்டிரீஸ் நிறுவனம் ஏற்று நடத்த முன்வருமா?"

அமைச்சர்:—"நான் ஏற்கனவே சொன்னேன்; இதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. 'ஏற்பது' என்று ஒரு முடிவுக்கு வந்தால்தான் இதுபற்றி பரிசீலிக்க வேண்டும்."

கேள்வி:—"வனஸ்பதி விலையை மத்திய அரசு உயர்த்த இருக்கிறது. மாநில அரசைக் கலந்துகொண்டு மத்திய அரசு, இந்த விலையை உயர்த்தியதா?"

அமைச்சர்:—"அதுபற்றிய விவரமில்லை."

—சட்டமன்றத்தில்

தமிழக அரசு பரிசு சீட்டுக் குலுக்கல் திட்டம்--ஒரு விளக்கம்

தமிழக அரசின் பரிசுச் சீட்டுக் குலுக்கல் திட்டத்தின் முதல் குலுக்கலுக்கான சீட்டுகளை வாங்குவதற்கு 14—9—68 கடைசி நாளாகும்.

இதுவரை சீட்டு வாங்காதவர்களும், வாங்குவதற்குத் தயங்கிக் கொண்டிருப்பவர்களும், இத்திட்டத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளுவதற்காகவும், ஐயப்பாடுகளை நீக்கிக்கொள்ளத் தக்கவகையிலும் அரசின வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :—

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூபாய் ஒன்று.

இந்தப் பரிசுச் சீட்டுகள், தொடர் எண்களில் (சீரிசில்) வெளியிடப் படும்.

ஒரு தொடருக்கு 9,99,999 டிக்கெட்டுகள் இருக்கும்; அவை 0,00,001 முதல் 9,99,999 என்ற எண்கள் வரை இடப்பட்டிருக்கும்.

ஒரு குலுக்கலுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட தொடர் எண்களில் டிக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்படும்.

ஒவ்வொரு தொடரும் தனிப்பட்டதாகவும், வெவ்வேறு வகையான அகர வரிசை எண்ணால் பாகுபாடு செய்யப்பட்டும் இருக்கும்.

9,99,999 டிக்கெட்டுகள் கொண்ட ஒவ்வொரு தனித் தொடருக்கும் பின்வரும் பரிசுகள் வழங்கப் படும் :—

பரிசு		பரிசுகள் எண்ணிக்கை	ஒவ்வொரு பரிசுகளின் மதிப்பு ரூ.	மொத்தப் பரிசுத் தொகை ரூ.
முதல் பரிசு	...	1	1,00,000	1,00,000
இரண்டாவது பரிசு	...	5	10,000	50,000
மூன்ருவது பரிசு	...	50	1,000	50,000
நான்காவது	...	500	100	50,000
			மொத்தம்	2,50,000

ஒவ்வொரு தொடருக்கும் தனித் தனியே குலுக்கலில் பரிசுகள் எடுக்கப்படும். பரிசுத் தொகைக்கு அரசு உத்திரவாதம் அளிக்கிறது.

பரிசு குலுக்கல்

பரிசு டிக்கெட்டுகள், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படும்.

பரிசு குலுக்கல் பொது இடத்திலும், இதற்காக அரசினல் நியமிக்கப்படும் குழுவின் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் குழுவில் தலைவரையும் சேர்த்து மொத்தம் ஐந்து உறுப்பினர்களுக்கு குறையாமல் இருப்பர்; ஆயினும், குலுக்கல் நடத்துவதற்கு குறைந்தது (கோரம்) மூன்று உறுப்பினர்கள் இருந்தால் போதுமானது.

விற்சப்பட்ட பரிசுச் சீட்டுத் தொடர் எண்களும், ஒவ்வொரு தொடரிலும் விற்கப்பட்ட டிக்கெட்டுகளின் எண்களும் அடங்கிய பட்டியல் ஒன்று குழுவிடம் தரப்படும்.

விற்பனையாகாமல் அரசிடம் தங்கிவிடும் டிக்கெட்டுகளின் பட்டியல் ஒன்றும் குழுவிற்கு குலுக்கல் ஆரம்பமாகும் முன் தரப்படும்.

குலுக்கல் தேதி டிக்கெட்டுகளின் மீது அச்சிடப்பட்டிருக்கிறது; குலுக்கல் தேதியை ஒத்திபோட அரசுக்கு அதிகாரம் உண்டு.

குலுக்கலுக்கான நடைமுறை

குலுக்கல் நடத்தப்படும் மண்டபத்தின் ஒரு ஓரத்தில் எல்லோருக்கும் தெரியும்படியாக 1, 2, 3, 4, 5, 6 என்ற அடையாள குறிப்புகளுடைய பெட்டிகள் (டிரம்பள்) வைக்கப்பட்டிருக்கும்.

1-வது பெட்டி இலட்சம் 'ஸ்தானங்'களையும், 2-வது பெட்டி 10 ஆயிரங்களையும், 3-வது பெட்டி ஆயிரங்களையும், 4-வது பெட்டி நூறுகளையும், 5-வது பெட்டி பத்துக்களையும், 6-வது பெட்டி ஒன்றுகளையும் குறிப்பிடும்.

ஒவ்வொரு பெட்டியும் 1 முதல் 9-வரை பத்து தட்டுகள் கொண்டனவாக இருக்கும்.

குலுக்கலுக்குமுன் பெட்டிகள் சிறிது நேரம் சுற்றப்பட்டு, முதலில் இலட்சங்கள் என்று குறிப்பிடப்பட்ட பெட்டியிலிருந்து குலுக்கல் ஆரம்பம் ஆகும். தொடர்ந்து 2, 3, 4, 5, 6 என்று ஒவ்வொரு பெட்டியாக குலுக்கப்படும்.

ஓர் எண் குலுக்கி எடுக்கப்பட்டதும் அந்த எண்ணை குலுக்கும் நபர் (குழுவினல் ஒப்புக்கொள்ளப்பட்டவர்) அறிவிப்பார்; குழுவினர் சரிபார்த்தபின், அந்த எண், அறிவிப்புப் பலகையில் போடப்படும்.

எல்லாப் பெட்டிகளும் குலுக்கப்பட்டு எண்கள் எடுக்கப்பட்ட பின் -- அதாவது குறிப்பிட்ட பரிசு பெறும் ஓர் எண் வந்த பிறகு -- பரிசுச் சீட்டு இயக்குநர் அவரது சொந்தப் பாதுகாப்பிலிருக்கும் பதிவேட்டில் அதைக் குறித்துக்கொள்வார். அதே போல் குழுவின் தலைவரும், அவர் வசமுள்ள பதிவேட்டில் அவர் கைப்பட அந்த எண்ணைக் குறித்துக்கொள்ளுவார். குலுக்கல முடிந்ததும், குழுவின் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் அந்த இரு பதிவேடுகளிலும் கையொப்பங்களையிடுவர்.

எல்லாப் பரிசுகளுக்கும் இதே போன்ற குலுக்கல் மீண்டும் மீண்டும் நடைபெறும்.

ஒவ்வொரு தொடரிலும் முதல் மூன்று பரிசுகளுக்கும் இம்முறை கடைப்பிடிக்கப்படும்; ஆனல், நான்காவது பரிசுச்குப் பின் வரும் முறை கையாளப்படும் :-

கடைசி நான்கு எண்களும் ஒரே மாதிரியாக முடிகின்ற இணைப்பு உள்ள டிக்கெட்டுகள், ஒவ்வொரு தொடரிலும் 100 இருக்கும் (உதாரணமாகக் கடைசி நான்கு எண்கள் 1,234 என்றிருந்தால் அதேபோல் முடிகின்ற எண்கள், 11,234, 21,234, 31234, 41234 என்றபடி கணக்கிடப்படும்); அதே போல், கடைசி நான்கு எண்களும் ஒரே மாதிரி உள்ள 5 இணைப்புகள் ஒவ்வொரு தொடருக்கும் குலுக்சப்படும். அந்த நான்கு எண்களும் ஒரெமாதிரியாக உள்ள டிக்கெட்டுகள் 4-வது பரிசு பெறத் தகுதியானவையாகும்.

எனவே 4 வது பரிசுக்குக் கடைசி நான்கு பெட்டிகள் மட்டுமே (அதாவது 3-வது, 4-வது, 5-வது, 6-வது பெட்டிகள்) இயக்கப்படும்.

விற்காத டிக்கெட்டிற்குப் பரிசு விழுந்தால் ....

குலுக்கி எடுக்கப்பட்ட எண் விற்காத டிக்கெட்டின் (அரசு வசம் விற்காமல் தங்கிவிடும் டிக்கெட்) எண்ணுக இருந்தால், அவ்வாறு அறிவிக்கப்படுவதோடு, விற்ற டிக்கெட்டின் எண் வரும்வரை மீண்டும் குலுக்கல் நடைபெறும்.

முதல் மூன்று பரிசுகளுக்கு மாத்திரமே இவ்விதி கடைப்பிடிக்கப்படும்; அதாவது, முதல் மூன்று பரிசுகள் சம்பந்தப்பட்டவரை விற்காத டிக்கெட்டுகளுக்குப் பரிசு அளிக்கப்படமாட்டாது. ஆனல், 4-வது பரிசு, விற்காத டிக்கெட்டின்பேரில் விழுந்தால், அந்த விற்காத டிக்கெட்டும் பரிசுப் பெறத் தகுந்ததாக அறிவிக்கப்படும்; ஆனல் பரிசுத் தொகை, அரசு வசம் வைத்துக் கொள்ளப்படும்.

பரிசுப் பெற்றவர்களின் பட்டியல் விரிவாக விளம்பரம் செய்யப் படும்; அதோடு அந்தப் பட்டியல், **செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழிலும்** (கெஜட்டிலும்) அதிகாரபூர்வமாக வெளியிடப் படும்.

பரிசு யாரிடம் பெறுவது ?

முதலாவது, இரண்டாவது பரிசுகள் பெற்றவர்கள் அரசு பரிசுச் சீட்டு இயக்குநரிடமிருந்துதான் பரிசுத் தொகையைப் கோரிப் பெறுவார்கள். மூன்ருவது, நான்காவது பரிசுகள் தமிழகத்திலுள்ள எந்தத் துணைக் கருவூலத்திலும் கோரலாம்.

பரிசுத் தொகை, பொதுவாகக் குலுக்கல் தேதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் கோரப்பட வேண்டும். அவ்வாறு கோரப்படாவிட்டால், அந்தத் தேதிச்குப்பின், 'அரசுப் பரிசுச் சீட்டு இயக்குநர், கோட்டை, சென்னை-9' என்ற முகவரிக்குத் தனி விண்ணப்பம் மூலம்தான் கோரிப் பெற முடியும்.

குலுக்கல் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குக் கோரப்படாத பரிசுத் தொகை காலாவதியாகி, தானகவே அரசுக்குப் பறிமுதல் செய்யப்படும்.

அரசுப் பரிசுச் சீட்டு விதிகள் பற்றியோ அல்லது விதிகளில் விவரமாக அறிவிக்கப்படாத வேறு எந்த விஷயம் பற்றியோ கேள்விகள் எழுந்தால், அவை, அரசின் பார்வைக்குக் கொண்டு வரலாம்; அதில் அரசின் தீர்ப்பே முடிவானது.

எண்ணூர் பவுண்டரீஸ் தி. மு. கழகத் தொழிலாளர்கள்

பொது மருத்துவமனையில் கழகத் தோழர்களின் உடல் நலம் பற்றி விசாரித்தனர்

26—8—68 அன்று எண்ணூர் பவுண்டரீஸ் தி.மு.க. தொழிலாளர்கள், சென்னை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன், பி. சிவசங்கரன் எம் பி., நாகலிங்கம் எம் எல்.ஏ. ஆகியோரைச் சந்தித்து உடல் நிலை பற்றி விசாரித்தனர்.

வடகாடு எம். ஜி. ஆர். மன்றம்

வடகாடு எம்.ஜி.ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல் தோழர் த. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது; கீழ்க்காணுவோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர் :—

அவைத் தலைவர்: கோ. வீரையா; செயலாளர் : சு. கருப்பையன் ; துணைச் செயலாளர் : இரா. தமிழ்ச் செல்வன் ; பொருளாளர் : சோ. அருச்சுனன் ; 31 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பொறுப்பை உணர்ந்தால்தான் கடமைகளை நிறைவேற்ற இயலும்

தமிழ்நாடு டாக்சி -- ஆட்டோ தொழிலாளர்களுக்கு என். வி. நடராசன் வேண்டுகோள்

சென்னை, ஆக. 31—

தமிழ்நாடு டாக்சி -- ஆட்டோ தொழிலாளர் சங்கத் தலைவர் என். வி. நடராசன் எம்.எல் சி. அவர்களும், பொதுச்செயலாளர் நெல்லையா அவர்களும் பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளனர்:—

"தமிழ்நாடு டாக்சி ஆட்டோ தொழிலாளர் சங்க உறுப்பினர்களும், தோழர்களும் தங்களின் கடமை உணர்ச்சியை உணர்ந்து பணியாற்றி வருவதை மனமாரப் பாராட்டுகிறோம்; எனினும் அவ்விதக் கடமையினை மேலும் ஒழுங்குற நிறைவேற்ற வேண்டியிருப்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க விருப்புகிறோம்.

அண்மைக்காலமாக, டாக்சி-- ஆட்டோ தொழிலாளர்கள்— காவல் துறையின—பொதுமக்கள் ஆகியோரிடையே தோழமை வளர்ந்து வருவது குறித்து நமது சங்கம் பெருமைப் படக் கூடியதாயிருப்பினும், சில டிரைவர் தோழர்கள் சற்று வரம்பு மீறி நடப்பதால் அனைவருக்குமே ஏற்படும் இழுக்கினைத் தங்களுக்குத் தாங்களே மனமாரச் சிந்தித்துப் பார்த்து, தவறுகளைத் திருத்திக்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

டாக்சி-ஆட்டோ தொழிலாளர்கள், தங்களின் அன்ருடப் பணியில் போட்டி உணர்ச்சியுடன் நடப்பதை சங்கம் குறைகூறவில்லை; ஆனல், தொழிலில் ஏற்படும் அந்தப் போட்டியினல் தொழிலாளர்களுக்கிடையே விரோதமும், வேறுபாடும் வளர்ந்து வருவது விரும்பத்தக்கதல்ல; சங்கத்திற்கும் அது பெருமையை அளிக்காது.

சென்ட்ரல், எழும்பூர், ஆர்பர் போன்ற இடங்களில், டாக்சி- ஆட்டோ தொழிலாளர்களில் சிலர், அன்ருடம் தங்களுக்குள்ளாகவே வீண் போட்டியையும், வேறுபாடுகளையும் வளர்த்துக் கொண்டிருப்பதாகச் சங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; இது உண்மையானல், இது போன்ற அவலநிலையை உடனே கைடவிட வேண்டுமென்றும், அதுமட்டுமன்றி 'ஸ்டாண்டு' களில் உண்மைக்கு மாருகப் பேசிவரும் சிலரது சூழ்ச்சிக்கு ஆளாகவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்து, தமிழ்நாடு டாக்சி-- ஆட்டோ தொழிலாளர்கள், சங்கத்தின் மூலமாகச் சில உரிமைகளை எதிர்பார்க்கும் பொழுது, 'சங்கத்திற்கு நாம் என்ன செய்தோம்--குறைந்த பட்சம், சங்கத்தில் உறுப்பினர்களாகவாவது சேர்ந்தோமா' என்று மன உணர்வுடன் எண்ணிப் பார்த்து, இதுவரை உறுப்பினர்களாகச் சேராதிருந்தால் உடன் சேருமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

தொழிற் சங்க வளர்ச்சி அல்லது வெற்றி என்பது தொழிலாளர் தோழர்களின் கூட்டுமுயற்சியேயன்றி தனிப்பட்ட செயல் அல்ல.

நமது சங்கத்தின் பெருமுயற்சியாகக் கூட்டுறவு முறையில் ஒவ்வொரு டிரைவர் தோழருக்கும் ஒரு டாக்சியை நீண்டகால தவணைமுறையில் சொந்தமாகச் செய்யப்படுகிறது. மேலும், பல தோழர்களுக்குத் தொடர்ந்து அதேபோல் செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. டாக்சி—ஆட்டோ தொழிலாளர்கள், தாங்கள் மேற்கொண்டுள்ள பணி சமுதாயத்தில் மரியாதைக்குரிய–பெருமைக்குரிய- பொறுப்புக்குரியதானது என்று உறுதியாக எண்ணுதல் வேண்டும். அப்போதுதான், தங்களின் கடமைகளையும் இனிதே நிறைவேற்ற முடியும்.

"பொதுமக்களிடம் நாம் நடந்து கொள்ளும் தன்மையின் வாயிலாகவும், அவர்களது ஆதரவு -- அனுதாபம் -- நல்ல எண்ணம் ஆகியவைகளைப் பெற வாய்ப்பாக அமையும். பொது மக்களின் ஒத்துழைப்பால் டாக்சி -- ஆட்டோ தொழிலாளர்கள் ஏற்றம் காண முடியும்" என்ற நம்பிக்கை சங்கத்திற்கு உண்டு.

டாக்சி -- ஆட்டோக்களில் பொது மக்கள் பயணம் செய்ய வரும் போதும், அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் சேரும்போதும் டிரைவர் தோழர்கள், 'வணக்கம்' என்று சொல்லும் முறையை அருள்கூர்ந்து கடைபிடிக்குமாறும், டாக்சியிலிருந்து பயணிகள் இறங்கும்போது தங்கள் தங்கள் உடைமைகளை எடுத்துக் கொண்டார்களா என்று கேட்குமாறும் வேண்டிக்கொள்கிறோம்.

காவல்துறையினரைப் பொறுத்தவரையில், அவர்களும் ஏழைத் தொழிலாளர்களே அல்லாது வேறில்லை; எனவே, அவர்களிடமும் நட்புடன்--ஆனல் முறைப்படி நடந்துகொள்ள வேண்டுகிறோம்.

காவல் துறையினர் ஒருகால் அநீதியாகக் குற்றஞ் சுமத்தி வழக்குத் தொடருவார்களேயானல், உடனடியாக சம்பந்தப்பட்ட டிரைவர் தோழர்கள், சங்க நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு அதிகாரிகள்மூலம் தீர்வு காண முற்படவேண்டும்.

டாக்சி --- ஆட்டோ டிரைவர் தோழர்களின் கடுமையான உழைப்பையும் வாழ்க்கை நிலையையும் உணர்ந்து, தோழமையுடன் நடந்துகொள்ளுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆனல், இத்தகைய தொடர்பினை, சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து எதிர்பார்ப்பதுதான் முறையும் நியாயமுமாகும் என்பதையும் டிரைவர் தோழர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

காவல்துறையினரும், தமிழ்நாடு டாக்சி -- ஆட்டோ தொழிலாளர்களிடம் அன்பு காட்டி, அதே சமயத்தில் முறைப்படி நடந்துகொள்வார்கள் என்று சங்கம் மனமார நம்புகிறது.

எனவே, டாக்சி -- ஆட்டோ தொழிலாளர்கள் மேலும் கட்டுப்பாடுடனும், கண்ணியத்துடனும், கடமை உணர்வுடனும் பணியாற்றி தங்களின் உரிமைகளைப் பெற்று -- தாங்கள் மேற்கொண்டுள்ள தொழிலுக்கும், சார்ந்துள்ள சங்கத்திற்கும் பெருமையைத் தேடித் தருமாறு மீண்டும் வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறோம்."

தொகுதி மக்கள் நலனில் எம்.ஜி.ஆர். காட்டும் ஆர்வம்

குடிநீர் வழங்க சொந்தச் செலவில் லாரிகள் வாங்கினுர்

சென்னை, ஆக. 29 —

தொகுதி மக்கள் தண்ணீர்த் தட்டுப்பாட்டால் இன்னலுறுவதைத் தடுத்து நிறுத்திடும் வகையில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., தம் சொந்தச் செலவில் இரண்டு லாரிகளை வாங்கித் தண்ணீர்த் தட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இந்த லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்திட உடனடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆலந்தூர் பகுதியில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு இருப்பது குறித்து தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான எம் ஜி. ஆர். அவர்களிடம் கூறி, தண்ணீர்த் தட்டுப் பாட்டை நீக்குமாறு தொகுதி மக்கள் முறையிட்டனர்.

தொகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவும் எம்.ஜி ஆர். அவர்கள், ஆலந்தூர் வட்டாரத்திற்குக் குடிநீர் விநியோகம் செய்யத் தம் சொந்தச் செலவில் இரண்டு லாரிகளை வாங்கினுர்.

கடந்த 27-ம் நாளன்று, ஆலந்தூர்ப் பகுதியில் குடிதண்ணீர் ஏற்றிச் சென்ற முதல் லாரி வீதி வீதியாகச் சென்று தண்ணீர் வழங்கியது.

காங்கிரசாரின் தரம் குறைந்த செயல் நீடிக்க -- நிலைக்கக்கூடியதன்று!

சட்டமன்றத்தில் அவர்கள் பெற்றுள்ள பலமும் பூண்டற்றுப் போக வழிகோலுகின்றனர்!

பண்பாடு இழந்தோரின் புறம்பான போக்கு -- அமைச்சர் மு. கருணாநிதி கடுந்தாக்கு!

சென்னை, ஆக. 31—

"அறிஞர் அண்ணா அவர்களின் விலகலால் ஏற்பட்ட தென் சென்னை இடைத் தேர்தலில், மக்கள், தி. மு. கழகத்திற்கு ஒரு இலட்சத்து ஐயாயிரம் வாக்குகள் தந்து, 'தி. மு. கழக ஆட்சியிடம் நம்பிக்கை இருக்கிறது' என்று கூறினர்; உடனே காங்கிரசுக்காரர்கள், 'பட்டினக்கரையில் உங்கள் ஆட்சிமீது நம்பிக்கை இருக்கலாம்; பட்டிக்காட்டில் நம்பிக்கையில்லை' என்றார்கள்!

"அடுத்து, கிராமப் பகுதிகள் அதிகமாக உள்ள சங்ககிரியில் இடைத்தேர்தல் நடைபெற்றது; பட்டினக்கரை மக்களைப் போலவே கிராமப் பகுதி மக்களும், 'தி. மு. கழக ஆட்சியில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு' என்று கூறி, கழக வேட்பாளரை வெற்றிபெறச் செய்தார்கள்!

"அடுத்து, தென்காசித் தேர்தல் வந்தது; அப்போது காங்கிரசுக்காரர்கள், 'நீங்கள் வெற்றிபெற்ற இடங்களைத்தானே பிடித்தீர்கள்; நீங்கள் வெற்றிபெற்ற இடங்களில்தானே உங்கள்மீது நம்பிக்கை இருக்கிறது' என்றார்கள்; 'நாங்கள் வெற்றிபெற்ற இடம் தென்காசி; அங்கு யார்மீது நம்பிக்கை இருக்கிறது — பார்ப்போம் — வாருங்கள்' என்று அறைகூவல் விட்டனர்.

"இதுவரையில், தனக்குரிய கோட்டைகளையே பிடித்துவந்த தி. மு. கழகம், 'எதிரியின் கோட்டை'யான தென்காசியில் தனது அறப்போர்க்களத்தை அமைத்தது! தென்காசி மக்கள் மிகத் தெளிவுடன் தீர்ப்பளித்தார்கள்—காங்கிரசைவிட 23 ஆயிரம் ஓட்டுகள் அதிகம் தந்து, 'உங்கள் மீதுதான் எங்களுக்கு நம்பிக்கை' என்று கூறினார்கள்!

"மக்கள் மன்றம் இவ்விதம் தீர்ப்பளித்தது கண்ட காங்கிரசார், சட்டமன்றத்திலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர்; சட்டமன்றமும், தி. மு. கழக ஆட்சிமீது நம்பிக்கை தெரிவித்தது!"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், அயன்புரத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெளிவுபடக் கூறினார்.

அயன்புரம் கலைஞர் மன்றச் சார்பில் நேற்று மாலை மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் இரா. அரிகரன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் கோ. மதிமாறன், அ. சண்முகம், நா. சு. மணி, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், வேலூர் டி. நாராயணன் எம்.சி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ. ஆகியோர் காங்கிரசாரின் பொய்ப் பிரச்சாரங்கள் பற்றியும், அவர்களின் தரக்குறைவான பேச்சுக்கள் குறித்தும், கழக அரசின் சாதனைகளை விளக்கியும் பேசினர்.

பின்னர் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள், அமைச்சர் கருணாநிதி அவர்களுக்குக் கேடயமும் முரசும் பரிசளித்துப் பேசினார்.

அமைச்சருக்கு அயன்புரம் 45-வது வட்ட குடிசை வாழ்வோர் சங்கச் சார்பிலும், கலைஞர் மன்றத்தின் சார்பிலும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

இரண்டு குழந்தைகளுக்கு அமைச்சர் பெயர் சூட்டினார்.

சாதனையை கேட்டவர்கள் செய்தது என்ன?

கேடயம்—முரசைப் பெற்றுக்கொண்டு அமைச்சர் கருணாநிதி அவர்கள் பேசுகையில் மேலும் விளக்கியதாவது:—

"காங்கிரசுக்காரர்கள் நம்மைப் பார்த்து, 'என்ன சாதனை புரிந்து விட்டீர்கள்?' என்று கேட்கிறார்கள்; நாம், நமது சாதனைகளை எடுத்துரைக்கத் தொடங்குகிறோம்.

'படி அரிசி போட்டோம்'—ஒரு விரலை மடக்குகிறார்கள்! 'பஸ் கட்டணத்தைக் குறைத்தோம்'—இன்னொரு விரலை மடக்குகிறார்கள்!

'புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்குச் செய்தோம்'—மூன்றாவது விரலை மடக்குகிறார்கள்! 'காவிரி நீர் கொண்டுவரத் திட்டம் போட்டோம்' — நான்காவது விரலை மடக்குகிறார்கள்; 'உற்பத்தியைப் பெருக்கி விலைகளைக் குறைத்தோம்' — ஐந்தாவது விரலை மடக்குகிறார்கள்! அதற்குப் பிறகும் நாம், நமது சாதனைகளைக் கூறுகிறோம்; ஆனால் அவர்கள், விரல்களை மடக்குவதற்குப் பதிலாக — முன்பே விரல்கள் மடக்கிய கையைக் கொண்டு — 'முஷ்டி'யைக் கொண்டு நம்மையே குத்த வருகிறார்கள்!

இப்படிக் காங்கிரசுக்காரர்கள் சொல்லும் ஒவ்வொரு குற்றச்சாட்டையும் இந்த நாட்டு மக்கள், செயலால் நிராகரித்து வருகிறார்கள்!

செல்வாக்குக் கண்டு மனம் பொறுக்கவில்லை!

'சட்டம் — ஒழுங்கு குலைந்து விட்டது' என்பது அவர்களுடைய மற்றொரு குற்றச்சாட்டு; அதற்கு அவர்கள் காட்டும் உதாரணம் — ஆகஸ்டு முதல் தேதி நடந்த ஊர்வலம்; அந்த ஊர்வலம் எதற்காக நடந்தது? அவர்களது உள்ளம் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காகவா —கோரிக்கைக்காகவா--இல்லை! தி. மு. கழக ஆட்சிக்குப் பெருகி வரும் செல்வாக்கைக் கண்டு மனம்பொறாத காரணத்தால்!

முக்காடு போடுவதுதான் 'சிறப்பு'க்கு அறிகுறியா?

அந்த ஊர்வலம் வழி மாறிப் போனபோது தடியடி நடந்தது; 'முன்னூறு பேர் காயமடைந்தனர்' என்று காங்கிரசார் கூறினார்கள்; அதற்கு அண்ணா அவர்கள், 'முன்னூறு பேர் அல்ல; மூன்று பேர் அடிபட்டிருந்தாலும் எனது அனுதாபம் உண்டு' என்று பெருந்தன்மையோடு குறிப்பிட்டார்.

அந்தப் பெருந்தன்மைமிக்க தலைவரின் சிலை அருகே அந்த ஊர்வலம் வந்தபோது, அவர்கள் என்ன செய்தார்கள்?—கறுப்புத் துணியை எடுத்துச் சிலைமீது விட்டெறிந்தார்கள்! முக்காடு போட்டுக்கொண்டு சென்றார்கள்! அந்தச் சிலையை அவமானப்படுத்தினார்கள்!

அரசியலில் கருத்து வேறுபாடு இருக்கலாம்; ஆனால், அதற்காக ஒரு கட்சியின் தலைவரின் சிலைக்கு முன்னால் கறுப்புத் துணி போடுவதும், முக்காடு போடுவதும் சரிதானா?

ஏதேனும் ஒன்று நடைபெற்றது உண்டா?

காங்கிரசுத் தலைவரான காமராசரின் சிலை இதே சென்னையில் இருக்கிறது; எத்தனையோ ஊர்வலங்களை—பேரணிகளை தி. மு. கழகம் அந்தச் சிலை இருக்கும் வழியாக நடத்திச் சென்றது உண்டு; அப்போது காமராசரின் காங்கிரசு ஆட்சியில், மக்கள் சோறில்லாமல் கிடந்த நேரம் — இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழர்கள் சுடப்பட்டு தெரு ஓரத்தில் குவிக்கப்பட்ட நேரம்—இருந்தபோதிலும், அந்தச் சிலைக்கு ஒரு துளி அவமானம் நேர்ந்ததுண்டா?

செய்ததையும் செய்தனர்- 'தவறு என்ன?' என்றனர்

தென்காசித் தேர்தல் முடிந்த வேளையில் --- மக்கள் தி. மு. கழக ஆட்சியிடம் நம்பிக்கை தெரிவித்த நேரத்தில்--ஊர்வலம் நடத்தினார்கள் -- அண்ணாவின் சிலைக்கு அவமானம் புரிந்தார்கள் அவர்கள்!

ஒருவர் செத்துவிட்டால் என்னென்ன செய்வார்களோ -- அதையெல்லாம் செய்தார்கள்!

கறுப்புத் துணியை வீசினார்கள்-- முக்காடு போட்டுக்கொண்டார்கள்!

இத்தனையையும் செய்துவிட்டு, 'அதைச் செய்ததில் என்ன தவறு?' என்று கேட்டார்கள்,

அண்ணா அவர்கள் விளக்கம் கூறினார்; அதற்குப் பிறகு அவர்கள், 'அண்ணாவின் மனம் புண்படுமானால், அந்த நிகழ்ச்சிக்கு வருத்தம் தெரிவிக்கிறோம்' என்று கூறினார்கள்.

அதற்கு அண்ணா அவர்கள், 'என் மனம் இதனால் புண்படாது' நான் செத்துவிட்டால் எனக்கு அனுதாபம் தெரிவிப்போர் காங்கிரசில் எத்தனைப் பேர் இருக்கிறார்கள் என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது' என்று பெருந்தன்மையுடன் கூறினார்கள்!

அழித்துக்கொள்வதற்கே அதனைச் செய்தார்களா?

அந்தப் பெருந்தன்மைப் பெட்டகத்தை-அமைதியின் உருவை-அடக்கத்தின் வடிவத்தை 'சிலம்பு செல்வர்' போன்றவர்களால் 'சிலர்' என்று அழைக்கப்படுபவரை -- அவமானப்படுத்தினார்கள் காங்கிரசார்!

இதை எதற்காகச் செய்கிறார்கள் காங்கிரசார்?—அவர்கள் கட்சி அழிவதற்காகவே செய்கிறார்கள்! இப்போது சட்டமன்றத்தில் பெற்றுள்ள பலமும் பூண்டோடு அற்றுப்போகத்தான் செய்கிறார்கள்!

அவர்களது இழிமொழிகளை -- இதுபோன்ற அவமானச் செயல்களைத் தாங்கும் திறன்பெற்றது தான் தி. மு. கழகம்!

அவர்கள் விடுக்கும் 'அக்கினியாஸ்திரம்' எனும் நெருப்பு கக்கும் கணைகளைக்கூட, 'வருணாஸ்திரம்' எனும் மழை பொழியும் அஸ்திரமாக மாற்றிடும் திறமைபெற்றது தி. மு. கழகம்!

காங்கிரசுக்காரர்களின் தரங்குறைந்த பிரச்சாரமும், பிறரை அவமானப்படுத்தும் போக்கும் நீடிக்கக்கூடியதுமல்ல -- நிலைக்கக்கூடியதுமல்ல!

டாக்சி டிரைவர் கூட்டுறவு சங்கத் துவக்க விழா

சென்னை டாக்சி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கம், தவணை முறையில் டாக்சிகளை விற்பனை செய்து டிரைவர்களுக்கே உரிமையாக்கும் திட்டத் துவக்கவிழா 1—9—68 மாலை 4 மணிக்கு சென்னை — இராயப்பேட்டை உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடைபெறும்; பொதுப் பணி அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் தலைமைவகிப்பார்; கூட்டுறவு அமைச்சர் திரு. மாதவன் திட்டத்தைத் துவக்கிவைப்பார்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. தேர்தல்

29--9--68 ஞாயிறு காலை 10-மணிக்கு

வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் 29—9—68 ஞாயிறு காலை 10-மணிக்கு வேலூர் நகர மண்டபத்தில் (டவுன் ஆல்) நடைபெறும். தேர்தல் ஆணையாளர் தோழர் சி. சிட்டிபாபு எம்.பி.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தோவாளை வட்டத் தேர்தல் இடமாற்றம்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள தோவாளை வட்டத் தேர்தல் நடைபெறும் இடம், பூதபாண்டி பயணிகள் விடுதி என்று மாற்றப்பட்டுள்ளது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குளச்சல் நகர தி.மு.க. தேர்தல்

குமரி மாவட்டம் குளச்சல் நகர தி. மு. க. தேர்தல் 7—9—68 காலை 10-மணிக்கு குளச்சல் நகர பயணிகள் விடுதியில், ஆணையாளர் என். கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திருச்சி மாவட்ட தி.மா.மு.க. தோழர்கட்கு;

"திருச்சி மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம், திருச்சி முனிசிபல் சத்திரத்தில், 1—9—68 பிற்பகல் 3-மணிக்கு நடைபெறும்; அதுபோது மாநாடு பற்றியும், அறிஞர் அண்ணா அவர்களின் 60 ம் ஆண்டு பிறந்த நாள் விழா கொண்டாடும் முறை பற்றியும் முடிவெடுக்கப்பட வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்"

என, பொறுப்பாளர் எம். எஸ். வெங்கடாசலம் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

2--9--68

தொழுப்பேடு

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: சி அருணாசலம்; பேசுவோர்: கோவை செழியன், டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., வி. ப. அகிலன், வி. வெங்கா, சண்முகம்.

அருந்தவபுரம்

தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு; தலைவர்: பசுபதி; பேசுவோர்: கோ. சி. மணி எம்.எல்.சி., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., பி. சாமிநாதன், செ. தனசாமி.

மூன்று பத்திரிகைகள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அரங்கநாதன் எழுப்பிய உரிமைப் பிரச்சினையில், 'நவமணி' இதழுடன் திரு. சி. சுப்பிரமணியம் பெயரையும், திருமதி அனந்தநாயகி பெயரையும் சேர்த்திருந்தார்; 'அந்தப் பெயர்களை நீக்கிவிடலாம்' என்றும், பத்திரிகைச் செய்தி அடிப்படையிலேயே அவர்கள் விமர்சனம் செய்திருப்பதாகவும், எனவே 'நவமணி' பத்திரிகையை மட்டும் பிரச்சினைக்குரியதாக வைத்துக் கொள்ளலாம் என்றும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

'சுதேசமித்திரன்' மீது திரு. இளம்வழுதி அவர்கள், உரிமைப் பிரச்சினை எழுப்பிப் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்.

"'சுதேசமித்திரன்' நிருபர் ஒரு துண்டுக் காகிதத்தில் ஏதோ எழுதி, உறுப்பினர் திரு மார்ட்டின் (ராங்) கையில் கைநீட்டிக் கொடுப்பதை நான் கண்ணால் கண்டேன். இது முறையா?"

என்று அமைச்சர் கருணாநிதி கேட்டார்.

திரு. மார்ட்டின் எழுந்து, தன்னைப் பார்க்க ஒருவர் வந்திருப்பதாகவும், அவர் வந்திருக்கும் தகவலைத்தான் துண்டுக் காகிதம் மூலம் அந்த நிருபர் தன்னிடம் தெரிவித்ததாகவும் கூறினார்.

உடன் அமைச்சர் கருணாநிதி அவர்கள், "துண்டுக் காகிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தாலும், அவையில் இருக்கும் உறுப்பினரிடம் குறுக்கு வழியில் ஒரு நிருபர் துண்டுக் காகிதம் கொடுப்பது முறையா?" என்று கேட்டார்.

அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள், இப்படிப்பட்ட சம்பவம் முறைகேடானதுதான் என்றும், உறுப்பினருக்குத் தகவல் தெரிவிக்கவேண்டுமானால் அதற்கான வழிமுறைகளும், பணியாளர்களும் இருக்கிறார்கள் என்றும், இத்தகைய முறைகேடான காரியங்களில் நிருபர்கள் ஈடுபடக்கூடாது என்றும், உறுப்பினர்களும் இதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்றும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் எழுந்து, (ஆளுங்கட்சிப் பக்கம் ஓரத்தில் அமர்ந்திருக்கும் அதிகாரிகளைச் சுட்டிக்காட்டி) 'அமைச்சர்கள் மட்டும் அந்தப் பக்கம் உள்ளவர்களிடமிருந்து துண்டுக் காகிதமோ, தகவலோ பெறலாமா?' என்று கேட்டார்.

அதற்கு, அவைத் தலைவர் பதிலளித்ததாவது:—

"மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீண்டகால அனுபவம் உள்ளவர்; ஆளுங்கட்சியின் கொறடாவாகவும் பணியாற்றியிருக்கிறார்; அவர், நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதில்லை; அமைச்சர்கள் சரியான தகவலை அவைக்குத் தர, அதிகாரிகளிடமிருந்து தகவல் பெறுவது அவசியம்; அப்படித் தகவல் தேவையென்றால் அமைச்சர்கள்தான் அதிகாரிகள் இருக்குமிடம் சென்று தகவல் பெறுவார்கள்; அல்லது, பணியாளர்மூலம் தகவல்கள் உள்ளே அனுப்பி வைக்கப்படும்; அதிகாரிகளே உள்ளே வருவதில்லை."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) [illegible]